# கோவில்பட்டி நகராட்சி
# அவசரக்கூட்டம்

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான ஸ்ரீ சுபகிருது வருடம் தை திங்கள்-9. நாள்:-23.01.2023ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற அவசரக் கூட்டம்.

முன்னிலை:-திரு.கா.கருணாநிதி
நகர்மன்ற தலைவர்

பொருள் எண் 1

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.01.2023ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண்.32945/2022/EA2-SWM-10 உத்திரவில் கோவில்பட்டி நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான தூய்மைப்பணியாளர்கள், தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி இதனை இந்நகராட்சியால் குறிப்பிடும் உரமாக்கும் மையம் (MCC), மறு சுழற்சி மையம் (RRC) மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.4129.59 என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்து பணி மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள கோவில்பட்டி நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.599.40 இலட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொதுநிதி மற்றும் 15$^{TH}$ CFC SWM Tied Grant ஆகியவற்றில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதன்பொருட்டு ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் இதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.302/2023/எச்1

பொருள் எண் 2

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் தினசரி சந்தையில் கலைஞர் நகர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பழைய கடை கட்டிடங்களை இடித்து விட்டு ரூ687 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக 251 கடைகள் கட்ட துரிதப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி புதியதாக கட்டப்படும் தினசரி சந்தை கடைகளில் தற்போது கடை வாடகை உரிமம் பெற்று வணிகம் புரிந்து வரும் குத்தகைதாரர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை காப்பாற்றும் வகையில் குறைந்தபட்சம் ஒரு கடை வழங்க ஏல விதிகளுக்கு உட்பட்டு முடிவெடுக்கப்படும். மேற்படி புதிய கடைகளுக்கு உரிமம் வழங்கப்படும் போது நகராட்சி பொது ஏல விதிகளுக்கு உட்படுத்தப்பட்டும் மற்றும் தற்போது உரிமம் பெற்ற கடைகளுக்கு ஜனவரி 2023 மாதம் முடிய உள்ள வாடகை தொகையிணை நிலுவையின்றி 31.01.2023 க்குள் செலுத்தப்பட்ட குத்தகைதாரர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அடிப்படையில் கடைகள் ஒதுக்கீடு செய்து உரிமம் வழங்கப்படும் என தீர்மானம் கொண்டுவரப்படுகிறது

நகர்மன்ற தலைவர்
கோவில்பட்டி நகராட்சி

\